Vol. 1 No. 2 July-December 2013 ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. M.A.S. Habeebur Rahman*
*Dr. S. Somasundram*
*Dr. M. Pandi*
*Dr. S. Rajikkannu*
*Dr. T. Kanagasabai*
*Dr. A. Arivunambi*
*Dr. S. Rajaram*
*Dr. K. Thilagavathi*
*Dr. H.M. Nathersha*
*Dr. G. Sheik Meeran*

*Associate Editor*
*Dr. S. Ramesh*

*Assistant Editor(s)*
*Dr. M. Arunachalam*
*Dr. A. Thoufiq Rameez*

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகச் செம்மொழித் தமிழ் அரையாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A bi-Annual International Interdisciplinary Thamizh Journal)

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் சடங்கியல் மருத்துவம் - மானிடவியல் ஆய்வு

**சண்முகராஜா சிறிகாந்தன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.**
**விரிவுரையாளர், சமூகவியல்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை**

## முன்னுரை

தமிழர் பண்பாட்டுச் சூழலில் மானிடவியலின் பயன்பாடு முனைப்புப் பெற்றுவருகின்ற சமகாலத்தில் சடங்கியல் மருத்துவம் தொடர்பான மானிடவியல் நோக்கிலான இவ்வாய்வு யாழ்ப்பாணத் தமிழர் சமூகத்தில் தொன்று தொட்டு இருந்துவரும் சடங்கியல் மருத்துவத்தினை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. கைத்தொழில் வளர்ச்சிக்கு முற்பட்ட கால சமூகங்களில் மருத்துவம் என்பது மக்களின் வாழ்வியல் முறையுடன் இணைந்த ஒன்றாக இருந்து வந்துள்ளது. இந்நிலையில் அன்றாட தனிமனித, குடும்ப மற்றும் சமூக வாழ்வில் ஏற்படும் உயிரியல் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து மட்டுமல்லாது சமூக உளவியல் சார்ந்த துன்ப நிலைகளிலிருந்தும் விடுபட்டு அமைதியாக வாழ்வுக்கான வழிமுறையாக சடங்கியல் மருத்துவத்தினை மக்கள் பின்பற்றி வந்துள்ளனர். சமயர்சார் மாந்திரிகத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்ட சடங்கியல் மருத்துவமானது பண்பாட்டுத் தனித்துவம் வாய்ந்த ஒன்றாக ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படுகின்றது.

மனித சமூகம் தொடர்பான ஆய்வுகளை உயிரியல் மற்றும் பண்பாட்டு நிலையில் மானிடவியல் இணைத்து நோக்குகின்றது. இதன் பல்வேறுபட்ட பிரயோகத்தளங்களில் ஒன்றாக மருத்துவ மானிடவியல் காணப்படுகின்றது. மனித இனத்தின் வரலாற்றில் சிறிய நோய்கள் தொடக்கம் பெரிய நோய்கள் வரை மனிதன் எதிர்கொண்ட போதெல்லாம் அவற்றிலிருந்து மீள்வதற்கு தனித்துவமான வாழ்வியல் நடைமுறைகளினைப் பின்பற்றி வந்துள்ளான். இவை பிற்பட்ட கால மருத்துவத்தின் வளர்ச்சி நிலைக்கு அடிப்படையாக இருந்துள்ளது. அந்த வகையில் மனிதன் பயின்ற கலைகளுள் மிகவும் தொன்மையும், முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மருத்துவம் இன்றுவரை போற்றப்படுகின்றது. மருத்துவக் கலையானது இருவகையான தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டது.

1. நம்பிக்கை மற்றும் இயல்பு மீறிய சக்திகளின் அடிப்படையில் அமைந்துள்ள ஆதிகால மருத்துவம்.

2. பகுத்தறிவு மற்றும் பரிசோதனைகளின் அடிப்படையில் அமைந்த தற்கால மருத்துவம்.

இவ்விரண்டினுள்ளும் சடங்கியல் மருத்துவமானது முதல் வகையினைச் சார்ந்த ஒன்றாகும்.

மருத்துவ மானிடவியலர்களின் ஆய்வு அனுபவங்களின் வழியே ஒவ்வொரு பண்பாட்டிலும் மனிதனுக்கு ஏற்படும் நோயியல் கூறுகள் உயிரியல் முறையிலும், பண்பாட்டு முறையிலும் அணுகப்படுவது உறுதியாகியுள்ளது. இதற்கேற்பவே நோய்க்கான சிகிச்சை முறைகளும் உயிரியல் மற்றும் பண்பாட்டு ரீதியான மருத்துவத்தின் வழியே அணுகப்படுகின்றன (பக்தவத்சல பாரதி, 2005). அந்த வகையில் சடங்கியல் மருத்துவமென்பது குறிப்பிட்ட பண்பாட்டினரது சமய, சமூக பண்பாட்டு நம்பிக்கைகளின் வழியே மேற்கொள்ளப்பட்டு வரும் மரபார்ந்த மருத்துவ முறையாக விளங்குகின்றது.

புராதன கால இந்திய மருத்துவத்தில் நோய்களிலிருந்து மீட்சி பெறுவதற்கு மூலிகை மருத்துவத்துடன் மந்திரங்களும் தாயத்துகளும் கொடுக்கப்பட்டுள்ளமைத் தொன்மையான தமிழ்

இலக்கியச் சான்றாதாரங்களின் வழியே அறிய முடிகின்றது. இதன் வழி மருத்துவ மரபானது புராதன காலம் தொடக்கம் சமயத்துடன் மாந்திரிகத்துடனும் நெருங்கிய உறவினைக் கொண்டுள்ளமைப் புலனாகின்றது. பெருங்கற்பண்பாட்டுக்கு அப்பாலான பண்பாட்டு வேர்களினைக் கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகமானது தமிழகத்தின் வாழ்வியல் கோலத்துடன் இடையறாத் தொடர்பினையும் கொண்டிருந்தது. இந்நிலையில் யாழ்ப்பாணத்திலும் சடங்கியல் மருத்துவமானது தொன்மைப் பாரம்பரியத்தினைக் கொண்டு காணப்படுகின்றது.

ஆய்வின் செம்மைத் தன்மை கருதி யாழ்ப்பாண நகரத்தினை அண்மித்த மாநகரசபை எல்லைப் பகுதியினை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப் பட்டது. தொல்லியல் அகழ்வாய்வு மற்றும் தொன்மையான இலக்கியங்கள் வாயிலாக யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு வரலாற்று தொன்மையினை அறியமுடிகின்றது. மேலும் தமிழகத்தினுடனான உறவின் வழியேயும் காலனித்துவத்தின் வழியேயும் பிற பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டது. எனினும் யாழ்ப்பாணப் பண்பாடானது தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரு அரச நிர்வாக அலகுகளின் கிராமங்களை உள்ளடக்கிய இவ் ஆய்வுப் பிரதேசமானது நகரத்துவ மற்றும் கிராமத்துவ இராசதானியாக நல்லூர் விளங்கியுள்ளமை இங்கு நம் கவனத்திற்குரியது. இந்நிலையில் இங்கு வாழ்கின்ற மக்களின் மனங்களில் நகர, கிராமத்துவத் தன்மையானது இணைந்து காணப்படுகின்றது. இங்கு மரபார்ந்த மற்றும் நவீன கிறிஸ்தவ மற்றும் இந்து பாரம்பரியத்தினைக் கொண்ட கோயில்கள் சடங்கியல் மருத்துவ செயற்பாட்டில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளமையினை களவாய்வின் வழியே அறிய முடிந்தது.

இவ்வாய்வானது மானிடவியலின் முதன்மையான அணுகுமுறையான இன வரைவியல் ஆய்வு முறையினைப் பிரதான ஆய்வு முறையியலாகக் கொண்டுள்ளது. இனவரைவியல் என்பது குறிப்பிட்ட ஒரு பண்பாடு பற்றிய அனைத்து விடயங்களினையும் இரண்டு வழிமுறைகளில் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட சமூகத்தினரின் வாழ்வுமுறையினை விவரிக்கின்றது. ஒன்று, குறித்தஒரு சமூகத்தின் பண்பாட்டியல் கூறுகளை அச் சமூக மக்களினுடைய பண்பாட்டு நோக்கின் (புரிதலின்) அடிப்படையில் பெறுதல். இதனை அகநிலை நோக்கு (emic) என்பார். இரண்டாவது அதே சமூகத்தின் பண்பாட்டியல் கூறுகளை பிறிதொரு சமூகச் சூழலைச் சேர்ந்த ஒருவருடைய பண்பாட்டுப் பார்வையின் (புரிதலின்) வழியாகப் பெற்றுக் கொள்ளுதல். இதனை புறநிலை (etic) நோக்கு என்பார். இவ்விரண்டும் பண்பாட்டியல் கூறுகள் பற்றிய விபரித்தலில் முதன்மையிடம் பெறுகின்றன.

மரபு வழியாக தலைமுறை தலைமுறையாகக் கைக்கொள்ளப்பட்டு வரும் பல கூறுகளில் ஒன்றாக மரபுவழி மருத்துவம் காணப்படுகிறது. இவைகள் நாட்டுப்புற மருத்துவம், பாட்டி வைத்தியம் என்று மக்கள் நிலைப்பட்ட மருத்துவங்களாகச் சுட்டப் படுகின்றன. இதற்கு மறுபுறம் சித்த, ஆயுர்வேத, யுனானி போன்ற மருத்துவ மரபுகளில் தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்ற மருத்துவ மரபுகளாக உள்ளன. இவை அண்மைக் காலத்தில் நிறுவனமயப்படுத்தலுக்கு உள்வாங்கப் பட்டுள்ளன. மருத்துவத்தில் அறிவு என்பது மட்டும் போதுமானதல்ல அனுபவங்களும் அவசியமானதே. இதனை இன்று ஆங்கிலேய மருத்துவத்தில் 'நிபுணத்துவம்' என்று குறிப்பிடுகின்றனர். அதேவேளை மரவழியான மருத்துவத்தில் 'கைதேர்ந்தவர்', 'கைராசிக்காரர்' என்ற வழக்காறுகள் அவர்களுடைய அனுபவத்தின் சிறப்பினையே காட்டுகின்றன.

இந்த நிலையில் மந்திரம், மாந்திரிகம், மாயவித்தை மற்றும் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றதே சடங்கியல் மருத்துவமாகும். இது குறிப்பிட்ட பண்பாட்டினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவரின் துணையுடன் உயர்ந்த அதீத ஆற்றலுக்கும் (super natural power) மனிதனுக்கு இடையில் நிகழும் சடங்கு சார்ந்த ஒன்றாகக் காணப்படுகிறது. சடங்குகளின் வழியே நோய் கண்டு இருப்பவரை நிலைமாற்றம் செய்வதன் மூலம் நோய் மற்றும் நோய் கண்டு இருப்பவரை நிலைமாற்றம் செய்வதன் மூலம் நோய் மற்றும் பிணிகளிற்குச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. நாட்டுப்புற மருத்துவ ஆய்வாளர் கருப்பையா நாட்டுப்புற மருத்துவம் தொடர்பாக குறிப்பிடும்போது 'நாட்டுப்புற மருத்துவர்' (shaman) மந்திரம், பூசை, இரத்த வெளியேற்றம், அடித்தல், உமிழ்தல் முதலிய செயற்பாடுகளுடன் சடங்கியல் மருத்துவராக மக்கள் மத்தியில் தோன்றுகின்றார். இவர் தன்னுடைய மாந்திரிக சமயம் தொடர்பான தனித்திறமையின் மூலமும் மூலிகை மற்றும் மூலிகையல்லாத வேறு பொருட்களின் துணையுடனும் சடங்கியல் மருத்துவத்தினை மேற்கொண்டு வருகின்றார்.

யாழ்ப்பாணச் சடங்கியல் மருத்துவ மரபானது தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு மருத்துவ முறையாகும். திடீரென்று ஏற்படும் உடல், உளம், சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு தரக்கூடிய ஒரு முறையாக சடங்கியல் மருத்துவம் காணப்படுகிறது. குறிப்பாகக் குழந்தைகள் இரவில் தூக்கத்தில் அழுதல் தொடங்கி தொழிலில் ஏற்படும் நட்டம் வரையாகவுள்ள அனைத்திற்கும் மக்கள் முதலில் நாடுவது சடங்கியல் மருத்துவத்தினையே. அதாவது கற்பூரம் சுற்றிப் போடுதல் தொடங்கி கிரகதோச பரிகாரம் செய்தல் வரையிலான அனைத்துச் சடங்கியல் நடைமுறைகளையும் இதில் அவதானிக்கலாம். மேற்குறிப்பிட்ட தனிமனித, சமூகப் பிரச்சினைகளைக் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் எவ்வாறு மனங் கொள்கின்றனர் அல்லது எடுத்துக்கொள்கின்றனர் என்பதினைப் பொறுத்தே இவை அமையும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நவீன உலகமயமாதல் அலைகளிடையேயும் இன்றுவரை தொடர்ந்து நிலைபெற்றுவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் சடங்கியல் மருத்துவ நடைமுறைகளினை பின்வரும் ஒழுங்கின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து விளங்கிக் கொள்ள முடியும்.

## 1. நோயினை கண்டறிதலும் அவை பற்றி விளக்குதலும்

மருத்துவத்தில் நோயை இனங்காணுதல் என்பது முக்கியமாகும். அதாவது இது இந்த வகையான நோய் என்றும் இதற்குரிய காரணிகள் இவைதான் என்றும் இனங்காணுதல் நோயை குணமாக்கும் செயல்முறையினை வெற்றியடையச் செய்துவிடும். இந்நோய் இனங்காணல் செயல்முறையில் பல்வேறு நவீன பரிசோதனை அணுகுமுறைகள் கைத்தொழில் புரட்சியினைத் தொடர்ந்து அறிமுகமாகியுள்ளன. எனினும் நோய் பற்றிய விவரித்தலில் சடங்கியல் மருத்துவ நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் முதன்மைப் பெறுகின்றன. சடங்கியல் மருத்துவத்தில் நோயை இனங்காணுதல் என்பது பண்பாட்டுச் சார்புத் தன்மையும், வாழ்வியல் அனுபவமும் இணைந்த நிலையில் காணப்படுகின்றது.

மக்கள் மத்தியில் நோயினை இனங்காணுதல், அவை பற்றி பிறருக்கு வெளிப்படுத்தல் ஆகியனவற்றின் போதும் அணுகுமுறைக்கு முன்னர் தத்தமது பண்பாட்டுச் சமய நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதுவும் குறிப்பாகச் சின்னமுத்து, கொப்பளிப்பான், கூகைக்கட்டு போன்ற வெப்பகால நோய்களினை மக்கள் தெய்வத்தின் சீற்றமாக இனங்காண்கின்றனர். இதனை 'அம்மை பார்த்துள்ளது', 'அம்மை வந்துள்ளது', 'அம்மை போட்டுள்ளது' என்று பிறருக்கு வெளிப்படுத்துகின்றமையினை களாய்வின் வழியே அறிய முடிகின்றது.

இவ்வாறே இரவில் குழந்தைகள் மிகப்பெரிய சத்தத்துடன் அழுதல், தூங்காமல் இருத்தல், குடும்ப உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து ஏற்படும் விபத்துக்கள் போன்றனவும் இவ்வாறே முதலில் நோக்கப்படுகின்றன. அதாவது 'காத்துக் கறுப்புபட்டுவிட்டது', 'கண்ணூறுபட்டுவிட்டது' என்று முதல் காரணியாக தங்களைச் சுற்றிவாழும் சமூகச் சூழல்நிலையை மையமாகக் கொண்டு நோயை இனங்காணவும் இதனை வெளிப்படுத்தவும் முயல்கின்றனர். இவ்வாறு ஏராளமான எடுத்துக்காட்டுகள்கள் எல்லாச் சமூகங்களில் வாழக்கூடிய ஒவ்வொருவரும் சந்தித்து வருகின்றோம் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு நோயை இனங்காணுதல், அதனை வெளிப்படுத்துதல் போன்ற நடைமுறைகளின் பின்புலமான பண்பாட்டியல் சிந்தனையை மானிடவியலின் நோயியல் பற்றிய வரையறை தெளிவுபடுத்துகின்றது. நோய் என்பது கட்டாயம் உயிரியல் மருத்துவ விலகலாக மட்டும் இருக்க வேண்டும் என்றில்லை. அது குறிப்பிட்ட சமூக, உள, உயிரியப் பண்பாட்டினால் வடிவமைக்கப் பட்ட ஒன்றாகவும் இருக்க முடியும். இம் மருத்துவ மானிடவியலாளரின் கருத்தானது நோயினை ஒவ்வொரு சமூகப் பண்பாட்டு நிலையிலும் புரிந்துகொள்ளுதலின் அவசியத்தினை புலப்படுத்துகின்றது.

சங்ககாலத்தில் பசளை பாய்தல் என்று விவரிக்கப்பட்ட தலைவியின் நிலையானது பிற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியில் மெய்ப்பாடு (Somatic complex) என விவரிக்கப்படுவது இங்கு கவனத்திற்குரியது. இந்நிலையில் யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தினர் மத்தியில் நோயினைக் கண்டறிவதிலும் அதுபற்றி விளக்குவதிலும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாட்டின் கடந்தகால அனுபவங்கள், நிகழ்கால கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றமைகனஅவதானத்தின் அடிப்படையில் உணரமுடிகின்றது.

## 2. நோய்க்கான காரணங்களும் அவை பற்றிய நம்பிக்கைகளும்

மருத்துவ வரலாற்றில் கைத்தொழில் புரட்சியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் உலகில் தொன்று தொட்டு நிலவிவந்த பாராம்பரிய மருத்துவ அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இவ்வாறே நோய் இனங்காணுதல், நோய் குணமாக்குதல் பற்றிய கருத்தினங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இந்நிலையில் மனித உடல் என்பது பலகலன் தொகுதிகளினால் இணைக்கப்பட்ட ஒரு இயந்திரமாக நோக்கப்பட்ட நிலைமாறி அதனை சமூக உளத்துடன் இணைத்து நோக்கும் நிலை அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வருகின்றது. இக்கருதினங்களின் அடிப்படையிலேயே மருத்துவ மானிடவியல் கட்டியெழுப்பப்பட்டது.

மருத்துவ மானிடவியலாளர்கள் பல தொல்குடி மக்களிடம் மேற்கொண்ட களாய்வின் அடிப்படையில் உலகப் பண்பாடுகளிடையே வேறுபட் நிற்கும் மக்கள் நோயியல்கள் பற்றியும் அவற்றிற்கான காரணிகள் பற்றியும் பல்வேறு தரவுகளை முன்வைத்துள்ளனர். அந்த வகையில் மானிடவியலாளரான கிளிமென்ஸ் (Clements) 1932-ல் இனங்கண்டுகொண்ட உலகளாவிய நோய்க்கான மூலகாரணிகளினை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் நிலவிவரும் நோய் நிலைக்கான காரணங்களினையும் நம்பிக்கைகளினையும் பின்வரும் அடிப்படையில் நோக்கலாம். பின்வரும் நோய்க்கான காரணிகள் பற்றிய பகுப்பாய்வானது சடங்கியல் மருத்துவ முறையின் வழியே நோய்குணமாக்கல் சிகிச்சை பெற வந்தவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட விடயக்கலை ஆய்வுத் (Case studies) தொகுப்பிலிருந்து பெறப்பட்டவை என்பது கவனத்திற்குரியது.

## 2.1 முன் செய்த பாவம் (Sins of Previous Life)

குழந்தை இல்லாமை, விபத்துக்களினால் உடல் ஊறுபடல் மற்றும் தீராத நோய் அனைத்தினையும் மக்கள் தம்முடைய வினைப் பயனாகவே கருதுகின்றனர். வகை மாதிரியாக நோய் நீக்கம் பெற குணமாக்கும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றிற்கு வருகை தந்து, நோய் குணமாகிய ஒருவர் குறிப்பிடும் போது, 'நான் இரண்டு வருடங்களுக்கு முன் அளவுக்கு மீறிய ஆசையினால் தகாத பழக்கங்களினை கொண்டிருந்தேன். இதனால் மருத்துவமனை எதிலும் குணமாக்க முடியாத வயிற்று வலியினால் துன்பப்பட்டேன்' என்று கூறியமை இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

## 2.2 தெய்வக் குற்றம் (Wrath of Gods)

தத்தமது குல தெய்வ வழிபாட்டின் போது ஏற்படும் குறைபாட்டினாலும் அல்லது நேர்த்திக்கடன் செய்து முடிக்காமையினாலும் தமக்கு கண்ணோய், அக்கி, சின்னமுத்து மற்றும் கொப்பளிப்பான் ஏற்படுகின்றன என்று மக்கள் வலுவாக நம்புகின்றனர். குறியீட்டு மானிடவியலாளர்கள் இவை பற்றி குறிப்பிடும்போது மக்கள் அன்றாடம் தமக்கு நேரிடும் நோய்களினைக் குறியீட்டாக்கம் செய்வதன் வழியே புரிந்துகொள்வதுடன் அதன் வழியே அதற்கான சிகிச்சையினையும் பெற்றுக் கொள்கின்றனர். அதாவது தெய்வத்தின் சீற்றம் வெப்பமாகவும் அதன் விளைவு நோயாகவும் குறியீட்டாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான சிகிச்சையானது குளிர்மைப் பொருந்திய சடங்கின் வழியே தெய்வத்தினை சாந்தப்படுத்துவதன் மூலம் நடைபெறுகின்றது.

## 2.3. ஆவியின் அத்து மீறல் (Spirit Intrusion)

கர்ப்பம் கலைதல், மாதவிடாய் நீடித்தல், கெட்ட கனவு காணுதல் மற்றும் தீராத காய்ச்சல் போன்றவற்றினையெல்லாம் மக்கள் தம்முடனும் தமது சூழலிலும் வாழ்ந்து வாழவேண்டிய வயதில் வாழாது விபத்து, தற்கொலை, போர் போன்ற செயற்கையான காரணங்களினால் இறந்த தத்தமது உறவுகளின் ஆவிகளினால் ஏற்படுகின்ற ஒன்றாகவே மக்கள் காண்கின்றனர். வகை மாதிரியாக நோக்கின் 'எனக்கு கர்ப்பம் தரித்து சில மாதங்களில் அது கலைந்து விடுகின்றது. இதற்கு எனது இளைய சகோதரர் ஒருவர் கொல்லப்பட்டமையே காரணம்....' என்று கலையாடி குறி சொல்லும் கோயிலுக்கு வந்து குழந்தை பெற்றுக் கொண்ட கெண் களாய்வின்போது குறிப்பிட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

## 2.4மந்திர வித்தையும் சூனியம் செய்தலும் (Sorcery and Witch Craft)

குடும்பப் பிரச்சினை தொழிலில் நஷ்டம், உடல் உபாதை மற்றும் உள ஒழுங்கமைவின்மை ஆகியவற்றினை மக்கள் தம்முடைய வாழ்வியல் முன்னேற்றத்தினை ஏற்றுக் கொள்ள முடியாத தமது எதிரிகளினால் செய்யப்பட்ட செய்வினை, சூனியம் மற்றும் மருந்து போடலின் விளைவான ஒன்றாக திடமாக நம்புகின்றனர். களாய்வின் போது ஒரு குடும்பப் பெண்ணுடனான உரையாடலில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'எனது கணவருக்குத் திடீரென பக்கவாதம் வந்துவிட்டது நான் மிருசுவிலில் உள்ள கோயிலில் போய் கேட்டபோது அந்த அம்மா சொன்னார்கள் எனது கணவருக்கு செய்வினை செய்துள்ளார்கள்...' இவ்உரையாடல் யாழ்ப்பாணச் சமூகத்தினர் மத்தியில் மருந்து போடுதல், செய்வினை, பில்லி, சூனியம் வைத்தல் போன்றனவும் நோய்க்கான காரணிகளாக இனங்கண்டு கொள்ளும் முறையினை வெளிப்படுத்துகின்றது.

## 2.5. கண்ணூறுபடலும் விலக்குகளை மீறலும்

ஒவ்வொரு சமூகத்தினரது சமூக வாழ்வினை நெறிப்பத்துவதற்குரிய சமூக விழுமியங்களை நியமங்கள் காணப்படுகின்றன. இவற்றினை மீறுதல் கூட அவர்களின் நோய்க்கான காரணமாகவும் மக்கள் நம்புகின்றனர். பொதுவாக இந்து சமூகத்தினர்

மத்தியில் மாதவிடாய் என்பது விலக்குடைய ஒன்று என நம்பப்படுகின்றது. இதனால் குழந்தைகளை மாதவிடாய் பெண்கள் தொடுவதினால் குழந்தைக்கு தோசம் ஏற்படுகின்றது என்றும் அதன் விளைவினால் காய்ச்சல் மற்றும் நித்திரையின்மை ஏற்படுகின்றது என்றும் மக்கள் மத்தியில் பொதுவான நம்பிக்கை நிலவுகின்றது. இவ்வாறே பிறருடைய கண்படுதலும் குறிப்பிட்ட ஒருவரின் இயல்பான சமூக வாழ்விற்கு ஊறுபடுத்துவதாகவும் மக்கள் கருதுகின்றனர்.

தொகுத்து நோக்கும்போது சடங்கியல் மருத்துவத்தில் நோய் என்பது சமயம் சார்ந்த சமூக விலக்குடன் தொடர்புடை ஒன்று. இவை குறிப்பிட்ட சமூகத்தினரது சமயம் சார்ந்த சமூக நம்பிக்கையின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்பட வேண்டியன. ஏனெனில் ஒரு சமூகத்தில் நோய்க்குரிய காரணியாக நோக்கப்படும் செயற்பாடு அல்லது நடத்தைமுறை பிறிதொரு சமூகத்தில் அவ்வாறே இருப்பதில்லை. எனினும் மேற்குறிப்பிட்ட அனைத்து வகையினங்களும் தென்னிந்திய, இலங்கைச் சமூகத்தினைச் சேர்ந்தவர்களிடையே பொதுவான ஒன்றாக இருக்கக்கூடிய ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நோய்க்கான காரணிகள் சமயம் சார்ந்த நிலையில் நோக்கப்படுவது போன்றே நோய் குணமாக்குதல் செயற்பாட்டிலும் சடங்கியல் சார்ந்த நம்பிக்கைச் செயற்பாடுகளும் முதன்மை பெறுகின்றன.

## 3. நோய்குணமாக்கலில் இடம்பெறும் சடங்கு சார்ந்த விடயங்களைப் பகுத்துணர்தல்

நோய் நீக்கம் என்பது பொதுவாகவே ஒவ்வொரு மனித வாழ்விலும் அவசியமானது. இன்றை உலக குடித்தொகை அதீத வளர்ச்சியின் பின்புலமாக காணப்படும் காரணிகளில் மிக முக்கியமானது நோய் குணமாக்குதல் செயற்பாட்டின் துரித வளர்ச்சியே எனலாம். நோய்குணமாக்கும் செயன்முறையில் பாரம்பரிய மரபார்ந்த அணுகுமுறைகள் தொடக்கம் இன்றைய நவீன விஞ்ஞான கருவிகள் மற்றும் சிகிச்சை முறைகள் மருந்துவ மாந்திரைகளின் கண்டுபிடிப்புகள் என பல்வேறு கூறுகள் முதன்மை பெறுகின்றன. இவையனைத்தும் ஒருபுறம் இருக்கும்போது உலகில் வாழும் தொல்குடி மக்கள் தொடக்கம் நவீன நாகரிக மனிதர்கள் வரை தத்தமது பண்பாட்டுக்கே உரித்தான சில நோய்குணமாக்கல் செயன்முறைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

ஒவ்வொரு பண்பாட்டினரும் தமக்கு நோய் ஏற்படும் போதெல்லாம் சில தனித்துவமான நடைமுறைகளினைப் பின்பற்றி வருகின்றனர். அவ்வாறான நடைமுறைகளில் சடங்குசார் நடைமுறைகளும் உள்ளடங்குகின்றன. இவை குறித்த தனிநபர், அவர் சார்ந்த குடும்பம், சமூகம் ஆகிய அனைத்தினுடைய நம்பிக்கைகளுடன் தொடர்புபட்டன. சமய நம்பிக்கையுடன் மிக நெருங்கிய தொடர்பினைச் சடங்கின் வழியான நோய் குணமாக்கும் செயன்முறை கொண்டுள்ளது.

இந்நிலையில் நோய் குணமாக்கல் செயன்முறையில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினர் பின்பற்றி வரும் சடங்கியல் மருத்துவ நடைமுறைகளின் பின்வரும் அடிப்படையில் பகுத்து நோக்கலாம். நோக்கிலான மாதிரித் தெரிவுமுறையின் (purposive sampling method) அடிப்படையில் சேகரிக்கப்பட்ட விடயக்கலை ஆய்வுகளினைத் தொகுத்து பின்வரும் சடங்கியல் மருத்துவ நடைமுறைகள் இங்கு விவரிக்கப்படுகின்றன.

### 3.1. மந்திரித்து நூல் கட்டலும் தாயத்தணிதலும்

நோயென்பது கெட்ட ஆவிகளினது ஆதிக்கத்தின் விளைவினால் ஏற்படும் ஒன்றென்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்றாகவே மந்திரித்து நூல்கட்டலும் தாயத்தணிதலும் காணப்படுகின்றது. இம்முறை பொதுவாக இந்து, கிறிஸ்துவ கோவில்களில் குருமார்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சில கோவில் குருக்கள் இவற்றுள் சிறப்பு பெற்றவர்கள் என மக்கள் அங்கிகரித்துள்ளமை களாய்வின் வழியே அறிய

முடிந்தது. அந்தவகையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சிவன் கோவில் குருக்களிடம் தனது மகனுக்கு நூல்கெட்ட வந்த பெண் 'ஐயாவிடம் நூல் கட்டினால் குழந்தைக்குக் காய்ச்சல் மாறிவிடும்' என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இவ்வாறே கிறிஸ்துவ மக்கள் குருநகரில் பாதரிடம் வந்து குருசு கிறி மற்றும் ஜெபநீர் வாங்கிச் செல்வதும் மக்கள் மத்தியில் இவ் சடங்கியல் மருத்துவ மரபின் செல்வாக்கின வெளிப்படுத்துகின்றது.

### 3.2 பார்வைப் பார்த்தலும் கண்ணூறுகழித்தலும்

சிறிய விஷ ஜந்துக்களினால் மக்கள் கடியுண்டால் மருத்துவமனைக்கு செல்வதிலும் பார்க்க யாழ்ப்பாண நகரை அண்டியுள்ள கொட்டடி எனும் பகுதியில் உள்ள விஷக்கடி வைத்தியரிடமே செல்வதினை விரும்புகின்றனர். அங்கு அவர்கள் வேப்பிலை கொண்டு மந்திரம் சொல்லித் தடவி விடுவதன் மூலம் தமக்கு ஏறிய விசம் இறங்கிவிடுவதாக மக்கள் நம்புகின்றனர். ஒரு வாரம் குறித்த விசக்கடி குணமாக்கும் நிலையத்தில் காலை மாலை என்னும் இருவேளைகளிலும் தொடர்ச்சியாகச் சென்றபோது ஒவ்வொரு நாளும் சராசரியாக 12 பேர் சிகிச்சைக்காக அங்கு வருகின்றமையினை பதிவு செய்ய முடிந்தது. எளிய சராசரியாக வந்தவர்களுடன் உரையாடிய போது அவர்களில் சிலர் மருத்துவமனைக்கு சென்றிருந்த போதும் கூட விஷக்கடி வைத்தியரிடம் வந்துள்ளனர். அவர்களிடம் ஏன் இங்கு வந்துள்ளீர்கள் என்று கேட்டபோது 'காயம் மாறினாலும் விஷம் இறங்காது அதனால்தான் விஷமிறக்க இங்கு வந்தோம்' என்று அவர்கள் கூறியமை இங்கு கவனிக்கத்தக்கது.

மக்களின் அன்றாட வாழ்வில் கண்ணூறுகழித்தல் என்பது சாதாரணமாக இடம்பெறும் ஒரு சடங்காகக் காணப்படுகின்றது. வாரத்தில் வெள்ளி அல்லது செவ்வாய் கிழமைகளில் நோய்கண்ட ஒருவருக்கு கண்ணூறுகழிப்பார்கள். இதில் நான்கு முறைகள் காணப்படுகின்றன. அதாவது கற்பூரம் சுற்றி எரித்தல், முச்சந்தி மண்ணெடுத்துக் கழித்தல், தேங்காயில் கற்பூரம் ஏற்றி சுற்றி உடைத்தல், காலடி மண், செத்தல் மிளகாய், உப்பு, தேசிக்காய் மற்றம் வேப்பிலை ஆகியவற்றினை சுற்றி முத்தத்தில் போட்டு எரித்தல் ஆகிய முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன.

இந்த நான்கு முறைகளிலும் இறுதியாக உள்ள முச்சந்தி மண்ணெடுத்து சுற்றிப்போடுதல் என்பது ஒருவருக்கு தொடர்ச்சியான காய்ச்சல், அல்லது நோய் ஏற்படும் போது செய்வார்கள். ஏனையவை சாதாரணமாக உணவு வெறுப்பு, காய்ச்சல் போன்றவற்றிற்குச் செய்வார்கள். சில சமயங்களில் முன் ஏற்பாடாகவும் செய்வார்கள். அதாவது குறிப்பாகப் பரீட்சையில் அதிகபுள்ளி பெற்று சித்தியடைதல், குழந்தை புத்தாடை உடுத்தியிருந்த போது அதிகமானவர்கள் 'பிள்ளை அழகாக இருக்கு' என்று சொல்லுதல் அல்லது அதிகமானோர் பிள்ளையை தூக்கி முத்தமிடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மாலையில் பிள்ளைக்கு சுத்திப் போடுவார்கள்.

கண்ணூறு சுத்திப்போடும்போது சிலர் 'தாய் கண்ணூறு, கண்டவன் கண்ணூறு, நிண்டவன் கண்ணூறு, நாய் பூனை கண்ணூறு எல்லாக் கண்ணூறும் நாவூறும் பொடி பொடிந்து எரிஎரிந்து பூவிறங்கி போகவே' என்று சொல்லி கண்ணூறு சுத்திப்போடுவார்கள். இவற்றினை விட கடைகளுக்கும் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் எலுமிச்சம்பழம், வத்தல் மிளகாய் (காஞ்ச மிளகாய்). இதன் மூலம் தங்களுடைய கடைக்கு ஏற்பட்டிருந்த கண்ணூறுகள் கழிந்துவிடும் என்றும்; தங்களுடைய கடை வியாபாரம் மிகச் சிறப்பாக இடம்பெறும் என்றும் நம்புகின்றனர்.

### 3.3. தோசம் நீக்கலும் பரிகாரம் செய்தலும்

'எனது கணவர் நகைத் தொழிலாளி. அவருக்கு மருந்து போட்டதினால் அவரினால் ஒரு வேலையும் செய்யமுடியவில்லை. ஒரே குடி இதனால் அவரை மருந்து விழுத்த கூட்டி வந்தேன்'

என்று மருந்து விழுத்தும் பூசாரியாரிடம் வந்த பெண்ணின் கூற்று யாழ்ப்பாண மக்கள் மத்தியில் மருந்து விழுத்தல் சார்ந்த சடங்கியல் நடைமுறையின் இருப்புத் தன்மையினைக் காட்டி நிற்கின்றது. இதனைவிட செய்வினை அறுத்தல், கழிப்புக் கழித்தல் மற்றும் தேசிக்காய் வெட்டல் போன்ற பல்வேறுபட்ட சடங்கு முறைகளும் நோய் மற்றும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்காக செய்யப்படுகின்றன.

மேலும் குறிப்பு பார்த்து (ஜாதகம்) கிரக தோசம் கழித்தல், சிறப்பாக குழந்தைகளுக்கு பிணிதோசம் நீங்க நூல் கட்டல் என்பவை கூட சடங்கியல் மருத்துவ நடைமுறைகளாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்றன. பிணிநூல் என்பது வண்டு அரித்த பனை ஓலையில் எழுத்தாணியினால் யந்திரம் கீறி அதனை நூலில் முடித்து குழந்தையின் அரையாணில் அல்லது கழுத்தில் கட்டுதல் ஆகும். இதனை தேறு கயிறு என்றும் கூறுவதுண்டு.

### 3.4 நேர்த்திக்கடன் வைத்தலும் வழிபாடு செய்தலும்

பொதுவாக மக்கள் மத்தியில் தத்தமது தெய்வங்களுடனான உறவின் நெருக்கத்தினை இவை காட்டுகின்றன. தமக்கு துன்ப துயரங்கள் நேரிடுகின்ற போதெல்லாம் அவரவர்கள் தத்தமது குல தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் வைத்தலை மேற்கொள்ளுகின்றனர். குறிப்பாக பிள்ளை இல்லாத பெண்கள் தொட்டிலும் பிள்ளையும் செய்து கொடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், பிள்ளையினை வித்துவாங்கள், பிள்ளைக்குப் பிள்ளையாகத் தென்னம்பிள்ளை கொடுத்தல் போன்ற நோர்த்திக் கடன்களை வைப்பதுடன் அதனை நிறைவேற்றியும் வருகின்றனர். இன்னும் சிலரது வாழ்வில் கால், கை, கண் போன்றவற்றில் தீங்கு ஏற்படின் அதனை ஒத்த உருவத்தினை தத்தமது வசதிக்கேற்ப பொன், வெள்ளியினால் செய்து கொடுத்து வழிபடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் தொடக்கம் வல்லிபுர ஆழ்வார் கோவில் வரையாக இவ்வகையான வழிபாடுகள் இடம்பெறுவதனை கள ஆய்வின் போது அறியமுடிந்தது. பொங்கல், மடைபரவுதல், பலிகொடுத்தல், பால்காவடி எடுத்தல், செதில் காவடி எடுத்தல், பறவைக் காவடி எடுத்தல், தீ மிதித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல் போன்றனவும் இடம்பெறுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது.

அண்மைக் காலங்களில் போரி போது மேற்குலக நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றிருந்த மக்கள் அதிகமானவர்கள் போர் நிறைவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் வந்து தங்களுடைய நேர்த்திக் கடன்களுக்கான வழிபாடுகளைத் தங்களுடைய குலதெய்வக் கோவில்களில் நிறைவேற்றி வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தினரது வாழ்வியலோடு இணைந்த ஒன்றாக சடங்கியல் மருத்துவம் காணப்படுகின்றமையினை இவ்வாய்வின் வழியே அறியமுடிகின்றது. யாழ்ப்பாணச் சமூகம் கடந்த மூன்று தசாப்பதத்திற்கு மேலாக எதிர் கொண்டிருந்த உள்நாட்டு போரினால் மக்கள் தமது உறவுகளைப் பிரிந்தும், இழந்தும் இன்னும் தொலைத்தும் (காணாமல் போதல்) ஏங்கிக் கொண்டிருந்த காலச் சூழ்நிலையில் மக்களுக்கு உளரீதியான ஆதரவினையும் மக்கள் மத்தியில் வாழ்வின் மீதான பிடிப்பு தன்மையினையும் இச் சடங்கியல் மருத்தவம் சார்ந்த நடைமுறைகள் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நவீன மருத்துவமனைகள் யாழ்ப்பாணத்தில் இருந்த போதும் இடையிடையே ஏற்பட்ட மருந்து தட்டுப்பாடு மருந்து தடை மற்றும் பிரயாண வசதியின்மை போன்றற்றினால் கூட யாழ்ப்பாண சமூகம் மிகப்பெரிய அழிவினைச் சந்திக்காத வகையில் மக்களையும் மக்கள் மனங்களினையும் பாதுகாத்தவை இச்சடங்கியல் மருத்துவ

நடைமுறைகளே. மேலும் சடங்கியல் மருத்துவமானது யாழ்ப்பாணத்தில் தனியே மந்திர மாந்திரீகத்துடன் மட்டும் நின்றுவிடாது மூலிகை சார்ந்த மருத்துவத்துடனும் இணைந்து காணப்படுகின்து. இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சியும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

## 4. மானிடவியல் கோட்பாடுகளின் வழியேயான புரிந்துகொள்ளல்

சடங்கு என்பது மக்களின் உயிரியல் மற்றும் சமூகத்தளத்தில் இடம்பெறும் மாற்றங்களினைப் பண்பாட்டுத் தளத்தினடியாக இனங்கண்டு அவற்றினை சமயம் சார்ந்த பண்பாட்டு நடைமுறையாக மேற்கொள்ளும் ஒன்று. பிரேசர், விக்டர் ரேனர் ஆகியோருடைய ஆய்வுகளும், அவற்றின் அடிப்படையிலான கோட்பாடுகளும் சடங்கியல் மருத்துவம் பற்றிய மானிடவியல் புரிந்து கொள்வதற்கு பயனுடையனவாக உள்ளன.

பிரேசருடைய மந்திரம் மாந்திரிகம் பற்றிய கோட்பாடுகள் சடங்கியல் மருத்துவ நடைமுறைகளில் காணப்படும் கூறுகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்தற்குப் பொருத்தமாகவுள்ளன. தூயமந்திரம், தீயமந்திரம் போன்றன செய்வினை செய்தல், ஆவிகளின் அத்துமீறல்கள், பில்லி சூனியம் தொடர்பான நம்பிக்கைகள் போன்ற சடங்கியல் மருத்து நடைமுறையில் காணப்படும் இன்னொரன்ன நோய்க்கான காரணிகள் பற்றிய புரிந்து கொள்ளுதலை மேற்கொள்வதற்கு உதவுகின்றன. அதேவேளை ஒத்த விதி, தொத்து விதி போன்ற மந்திரத்தின் தொழிற்பாடுகள் பற்றிய பிரேசருடைய விளக்கங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் நிலவும் பல்வேறு நோய் குணமாக்கலுடன் தொடர்புடைய சடங்கியல் கூறுகளைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பொருத்தமாகவுள்ளன. எடுத்துக்காட்டாக நேர்த்திக்கடன் வைத்தல், அம்மை நோய்க்காலங்களில் செய்யப்படும் சடங்குகள் போன்றவற்றினை இங்கு குறிப்பிடலாம்.

சடங்கியல் மருத்துவச் செயற்பாடுகளை மிக நன்றாகப் புரிந்துகொள்வதற்கு விக்டர் ரேனருடைய எதிரமைப்பியல் கோட்பாடானது மிக முக்கியமானது. இது சடங்கியல் மருத்துவ நடைமுறைகளினைப் புறநிலையாக நோக்குவதற்கு பொருத்தமாகவுள்ளது. விக்டர் ரேனர் சடங்கினை மீவியல்புப் பண்பாகவும் அமைப்புக்கு எதிரமைப்பாகவும் மீச்சமூகமாகவும் கருதுகின்றார். சடங்கென்பது நெறிமுறையான செயற்பாடுகளை உள்ளடக்கிய ஒரு நாடகப்பாங்கான ஒன்றாகும்.

சடங்கியல் மருத்துவக்கூறுகள் அனைத்தினையும் பகுப்பாய்வு செய்து நோக்கினால் அவையனைத்திலும் பிரித்தல், நிலைமாற்றம் செய்தல், இணைத்தல் எனும் மூன்று பிரதான செயற்பாடுகளினைக் காணலாம். அதாவது நோய் நிலைக்குட்பட்டவரைக் குறிப்பிட சமூகத் தளத்திலிருந்து பிரித்து, புனிதம் மற்றும் புனிதமின்மைச் சடங்குகளின் வழியே நிலைமாற்றம் செய்து, பின்னர் இயல்புச் சமூகத் தளத்துடன் இணைக்கின்ற செயற்பாட்டினை உள்ளடக்கியவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அம்மை பார்த்த ஒருவரை முதலில் உணவு, இருப்பிடம் என்ற அடிப்படையில் தனிப்படுத்துவார்கள், அதன் பின்னர் அவர்களுக்கு வேப்பிலை மஞ்சள் தேய்த்து முழுகவார்ப்பார்கள். இவற்றின் பின்புலமாக பிற்பட்ட கால நவீன விஞ்ஞான மருத்து குறிப்புக்கள் இருந்தாலும் இதனை சடங்கியல் மருத்துவ நடைமுறையாகவே மக்கள் கைக்கொண்டு வருகின்றமை இங்கு கவனத்திற்குரியது.

தொகுத்து நோக்கின் யாழ்ப்பாண தமிழ் சமூகத்தினரது சமூக வரலாற்றிலும் பண்பாட்டுத் தனித்துவத்திலும் சடங்கியல் மருத்துவம் என்பது தனித்தன்மை வாய்ந்த ஒன்றாக நிலவிவருவதுடன் இச் சமூகத்தின் வாழ்வின் நீடிப்புக்கும்

பக்கபலமாக இருந்து வருகின்றது. மருத்துவப் பன்மைத்துவத்தினை (medical pluralism) வேண்டிநிற்கும் சமகால உலகில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சடங்கியல் மருத்துவமானது எவ்வகையிலும் நவீன மருத்துவ மரபிற்கு எதிரானதாகவோ அல்லது நிராகரிக்கின்ற ஒன்றாகவோ இருந்ததில்லை. மருத்துவ மானிடவியலின் எழுச்சியின் பின்புலமான தத்துவத்தினடியாக நோக்கும்போது, சடங்கியல் மருத்துவமானது உடல் - உள - சமூக ஆரோக்கியத்தினை ஒரே தளத்தில் பேணிவரும் பண்பாட்டுத் தனித்துவமிக்க ஒன்றாக விளங்குகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


பக்தவத்சல பாரதி. *(2002)*, தமிழர் மானிடவியல், சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

பக்தவத்சல பாரதி, *(2005)*, 'நாட்டார் வாழ்வில் நாடோடிகள் மருத்துவம்' பக்தவத்சல பாரி & என்.சண்முகலிங்கன் (பதிப்பு), இலங்கை இந்திய மானிடவியல். சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

சிவசுப்பிரமணியம், *(1997)*, மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, இந்தியா.

நிரஞ்சனா தேவி, இரா. *(2004)*. தென்னிந்திய மருத்துவ வரலாறு, சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இரகுபதி, பொ. *(2005)*. ஈழத்தமிழர் பண்பாட்டு அடையாளம் (பாவலர் துரையப்பா நினைவுப் பேருரை) தெல்லிப்பளை : மகாஜனக்கல்லூரி.

சிறிகாந்தன், ச. *(2008)*. மருத்துவமானிடவியல் அறிமுகம் : யாழ்ப்பாணம் : அன்னை வெளியீடு, வாழ்வியல் களஞ்சியம் தொகுதி *4. (1992)* இனக்குழு மருத்துவம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வாண்டு மாமா. *(1989)*. மருத்துவம் பிறந்த கதை. சென்னை : வானதி பதிப்பகம்.

Rothko, Corrad Philip. (1997). Anthropology the Exploration of Human Diversity, the Grew Gill Companies.

Shanmugalingam, N. (2000). New Face of Durga, Delhi : Kalinga Publishers.

Joshi Aril Mahajan P.C. (1990). Studies in Medical Anthropology, New Delhi : Reliance Publishing House.

Crope, Richly H. (1990). Cultural Anthropology Understanding our selves and others. The Dusking Publication Group Inc.


ઌ